

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (22.12.2025) சென்னை, கோட்டூர்புரம், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், எழுத்தாளர் திருமாவேலன் எழுதிய "முறைசெய்து காப்பாற்றும் முதலமைச்சர்" என்ற நூலினை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள் – கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, எஸ்.எஸ்.சிவசங்கர், முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி சோமு, அருண் நேரு, முனைவர் க.பொன்முடி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் கோபண்ணா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் டி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.எஸ். பாரதி, ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு, மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், இயக்குநர் அமிர்தம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், நூல் ஆசிரியர் ப.திருமாவேலன், கருஞ்சட்டை பதிப்பகத்தின் இயக்குநர் பெல் ராஜன், கவிதா பதிப்பகத்தின் சேது சொக்கலிங்கம், சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் மற்றும் சான்றோர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

### 100 நாள் வேலை: மகாத்மா காந்தி பெயரை மாற்றிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# இராணிப்பேட்டை மாவட்ட ஒன்றியங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி எம்.எல்.ஏ. அறிக்கை!



இராணிப்பேட்டை, டிச.24-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க மாவட்டச் செயலாளர், அமைச்சர் ஆர். காந்தி அறிக்கை வருமாறு:

டிசம்பர் 24 அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்! 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெறுகிறது.

100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பாஜக அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அதி. மு.க.வையும் கண்டித்து தலைநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் இன்று (டிசம்பர் 24-புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து அதன் திட்டப் பணிகளை சீர்குலைத்து நிதி ஒதுக்கீட்டை குறைப்பது.

மாநிலங்களின் நிதிச் சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவது. வேலைநாட்களை குறைப்பது. பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது கிராமங்கள் தான் நம் நாட்டின் முதுகெலும்பு என்ற அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்குவது.

இந்தியை திணிப்பது என சட்டத்தை திருத்தியும் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் அடிக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசின் நாசகார சதிச் செயலையும் அதற்கு ஒத்து ஊதி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யும்அ.தி.மு.கவையும் கண்டித்தும். சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் மதச் சார்பற்ற முற்போக்குக்கூட்டணி சார்பில் 24.12.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நமது மாவட்டத்தில் உள்ள ஒன்றியங்களிலும் 100 நாள் வேலைவாய்ப்பினால் பயன்பெறுவோரைத் திரட்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள்,

ஒன்றிய, நகர பேரூர். வட்ட கிளைக் கழகச் செயலளர்கள் நிர்வாகிகள். அணைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சார்ந்த அனைத்து கூட்டணி அமைப்புகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் ஒன்றிய செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பாஜ.க அரசையும் ஒத்து ஊதும் அதி.மு.க.வைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென வும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒழிக ! ஒழிக ! VBG G RAM சட்டம் ஒழிக!

தமிழ்நாடு போராடும்: தமிழ்நாடு வெல்லும்

எனவே நமது மாவட்டத்தில் அணைத்து ஒன்றியங்களிலும் மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் வெற்றிகரமாக கண்டன ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திடுமாறு ஒன்றிய கழக செயலார்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், நேற்று முன்தினம் (22.12.2025) சென்னை அண்ணாநகரில் வேளாண்பட்டம் / பட்டயம் படித்த இளைஞர்கள் சுயதொழில் தொடங்கும் முன்னெடுப்பாகவும், விவசாயிகளுக்கு அனைத்து விதமான சேவைகளையும் ஒரே குடையின் கீழ் வழங்கும் பொருட்டும் "முதலமைச்சரின் உழவர் நலசேவை மையங்கள்" அமைப்பது தொடர்பான பயிற்சி நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் த.ஆபிரகாம் மற்றும் தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 100 நாள் வேலை: மகாத்மா காந்தி பெயரை மாற்றிய ஒன்றிய அரசைக் கண்டித்து

# திருப்பத்தூரில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம், மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்,எல்,ஏ, அறிவிப்பு!



திருப்பத்தூர்,டிச.24-

100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து இன்று (24.12.2025 - புதன்கிழமை) காலை 10 மணியளவில், திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர், கந்திலி, ஜோலார்பேட்டை, நாட்றம்பள்ளி, ஆலங்காயம், மாதனூர் ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

1.ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில், திருப்பத்தூர். திருப்பத்தூர் கிழக்கு, மேற்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் தெற்கு ஆகிய ஒன்றியங்கள். 2.ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில், கந்திலி.

கந்திலி கிழக்கு, கந்திலி மேற்கு, கந்திலி தெற்கு, கந்திலி மத்தியம் ஆகிய ஒன்றியங்கள். 3.ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில், பாச்சல். ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்தியம் ஆகிய ஒன்றி யங்கள். 4.ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில், நாட்றம்பள்ளி.

நாட்றம்பள்ளி கிழக்கு, நாட்றம்பள்ளி மேற்கு ஆகிய ஒன்றியங்கள். 5. ஊராட்சி ஒன்றிய அலு வலகம் எதிரில், ஆலங்கா யம். ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மேற்கு, ஆலங்காயம் மத்தியம் ஆகிய ஒன்றியங்கள், 6.ஊராட்சி ஒன்றிய அலு வலகம் எதிரில், மாதனூர். மாதனூர் கிழக்கு, மாதனூர் மேற்கு, மாதனூர் மத்தியம் ஆகிய ஒன்றியங்கள்.

இந்த மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் அந்தந்த பகுதிக்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய, வார்டு கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கிளைக்கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்ட மன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.

